1990 மே 12]

திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் மேலூர் பகுதியில் உறை விந்து நிலையம், செயற்கை முறை கருவூட்டல் நிலையம் அமைக்க எந்த விவரமும் தரப்படவில்லை. ஆகவே, இந்த ஆண்டாவது அந்த உறை விந்து நிலையத்தை மேலூர் பகுதியில் அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியில் இப்போது 14 நிலையங்களில் உறை விந்துத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இன்னும் 11 நிலையங்களில் மட்டும் தான் உறை விந்துத் திட்டம் தற்சமயம் செயல் படுத்தப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் அரசினுடைய நிதி நிலைமைக்கு ஏற்ப தமிழகத்தில் உள்ள எல்லா கால் நடை மருந்தகங்களிலும், கிளை நிலையங்களிலும் உறை விந்துத் திட்டத்தை செயல்படுத்துகிற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அது படிப்படியாக நிறைவேற்றப்படும். அரசினுடைய நிதி நிலைமைக்கேற்ப உறுப்பினர் அவர்களுடைய கருத்தை இந்த அரசு கவனத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, கொட்டாம்பட்டி கிளை நிலையம் வாடிப்பட்டி கால் நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் செயல் படுவதாக இங்கே அமைச்சர் அவர்கள் அறிக்கையில் தெரிவித்து இருக்கிறார்கள். வாடிப்பட்டியானது கிட்டத்தட்ட 100 கி. மீ. தூரத்தில் இருக்கிறது. ஆகவே, கொட்டாம்பட்டி பகுதியில் இந்த உறை விந்து நிலையத்தை இந்த வருடம் அரசு அமைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன். உறை விந்துத் திட்டம் படிப்படியாக ஒவ்வொரு ஆண்டும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. அரசினுடைய நிதி நிலைமைக்கேற்ப அவை கருத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை மருந்தகம்

*6557—திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாகுடி மற்றும் பண்ணைவயல் கிராமங்களில் கால் நடை மருந்தகம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம்: தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த பண்ணைவயலில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இந்த அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக தொடர்ந்து நினைவூட்டுகளும் அனுப்பப்பட்டுள்ளன. இந்த நிலையில் அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொல்கிறார்கள். அதை தயவு செய்து மீண்டும் பரிசீலனை செய்து, பட்டுக்கோட்டையிலிருந்து 15 கி. மீ. தூரத்தில் இருக்கிற பண்ணை வயலில் இந்த நிலையத்தை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் அதிராம்பட்டினம், தம்பிக்கோட்டை, மேலக்காடு போன்ற இடங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

9-55 மணி.

அதோடு ஏனாதி, தொக்காலிக்காடு, துவரங்குறிச்சி, கீழ்க்கரம்பை பள்ளிகொண்டான், ஆகிய கிராமங்களிலும் கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. பட்டுக்கோட்டையில் இருந்து 18 கிலோ மீட்டர் பண்ணைவயல் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்த வரையில் 18 கிலோ மீட்டர் அல்ல. அதற்கு அருகாமையிலே சொக்கநாதபுரத்திலே ஒரு கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. சேதுபாவாசத்திரம், இரண்டாம் பள்ளிக்காடு கிராமத்திலே கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் கால்நடைகளினுடைய எண்ணிக்கைக்கு ஏற்பவும், கால்நடை மருத்துவமனைகளுக்கு இடையே உள்ள தூரத்தினுடைய அடிப்படையிலேயும், கால்நடை மருந்தகங்கள் துவக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை ஆய்வு செய்கின்ற போது, தற்சமயம் பண்ணைவயல்கிராமத்திலோ, கோட்டாகுடி கிராமத்திலோ மருந்தகம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற போது ...மைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்வதை நான்

ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் 18 கிலோ மீட்டர் தூரம் என்று நான் சொன்னதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 12 கிலோ மீட்டர் என்பது உண்மை. ஆனால் அந்தப் பண்ணை வயல் பள்ளத்தூர், பட்டுக்கோட்டை இந்த ஏரியாக்களைச் சுற்றி நீண்ட ஒரு பாலைவனச் சோலை போல அமைந்திருக்கிறது. ஆகவே அங்கிருந்து கிராமங்களுக்குச் செல்வது என்பது மிகவும் கஷ்டம். ஆகவே மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு தமிழகத்திலே கால்நடை மருந்தகம் அமைக்கின்றபோது, முழு மானியத்தோடு 1, 2, 3 என்று வரிசைப்படுத்தி, இங்கே நீங்கள் மானியம் வகுப்பதைத் தவிர்த்து, தமிழகத்தில் உள்ள எல்லாக் கால்நடை மருந்தகங்களுக்கும் முழு மானியத்தோடு அந்த கிளை மருந்தகங்களை அமைக்க அரசு முன் வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணைவயல் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்துகிறார்கள். அங்கே உள்ள கால்நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்பவும், பண்ணைவயல் கிராமத்தில் 8 கிலோ மீட்டர் தூரத்தில், சுற்றளவில் வேறு ஏதேனும் கால்நடை மருந்தகங்கள் இல்லாது இருக்குமானால், அவர்களுடைய கருத்துக்களை இந்த அரசு கவனத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் முழு அளவு மானியம் வழங்குகின்ற சூழ்நிலை தற்சமயம் அரசிடம் இல்லை என்பதை மீண்டும் வலிறுத்த விரும்புகிறேன்.

மதுரை மாநகருக்குப் பெருநகரத் திட்டம்.

* 2209 ஏ—திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாநகருக்கு பெருநகரத் திட்டம் தயாரிக்கும் பணி எந்த அளவில் உள்ளது ?

(ஆ) எப்போது அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மதுரை உள்ளூர் திட்டப் பகுதியில் கூடுதலாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கும் சேர்த்து ''முழுமைத் திட்டம்'' திருத்தப்பட வேண்டியுள்ளதால், மதுரை மாநகர உள்ளூர் திட்டக்குழு தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.